Vol. 5, Issue-1, June 2021 P.No. : 56 - 63

புதிய அவையம்

மின்னிதழ்

ISSN : 2456-821X

http://shcpub.edu.in

*ச. மணிமேகலை,*
*முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர்,*
*தமிழ்த்துறை,*
*தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி),*
*திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம் – 635 601.*

**தலைப்பு :** பெரும்பாணாற்றுப்படையில் இடப்பெயர்கள்

## முன்னுரை

*பண்டைக் காலமக்களின் வாழ்வியலைத் தெளிவாக எடுத்துக்காட்டும் கருவியாக அமைந்தவை சங்க இலக்கியங்கள். அவை பாட்டு, தொகை என இரண்டாகத் தொகுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் 100 க்கும் மேற்பட்ட அடிகளின் அடிவரையறையில் அமைந்தவை பத்துப்பாட்டு. அந்தப் பத்துப்பாட்டில் ஒன்றான பெரும்பாணாற்றுப்படையில் அமைந்த இடப்பெயர்களை ஆராய்வது இவ்வாய்வுக் கட்டுரையின் மையக்கருவாக அமைகின்றது.*

## இடப்பெயர்

*ஒரு பொருளை, ஒரு மனிதனை, ஓரிடத்தைக் குறிக்க எழுந்த குறியீடே பெயர்கள். பொருளையோ அல்லது மனிதனையோ தனித்தறியத் தனிப் பெயர்கள் அமைந்தன போன்று ஓரிடத்தைப் பிற இடங்களினின்றும் பிரித்தறியத் தோன்றியன இடப்பெயர்கள். இடப்பெயர்கள்*

ஆய்வு என்பது சிற்றூர், பேரூர், மூதூர், மலை, வீடு, வெளி, பொதுவிடம், வயல், மேய்ச்சல் நிலம் முதலியவற்றைக் குறிப்பதாகும்.

**நில அடிப்படையில் இடப்பெயர்கள்**

சங்க கால மக்கள் தாம் வாழும் நிலப்பகுதிகளுக்கு ஏற்ப ஊர்களுக்குப் பெயரிட்டனர்.

குறிஞ்சி – சிறுகுடி, குறிச்சி

முல்லை – பாடி, சேரி, பள்ளி

மருதம் – ஊர், பேரூர், மூதூர்

நெய்தல் – பட்டினம், பாக்கம்

பாலை – பறந்தலை, குறும்பு

எனும் இம்முறையில் சங்ககால இடப்பெயர்கள் அமைந்திருந்தன. ஐந்திணை நில அமைப்புக்களும் மூவேந்தர் நாட்டிலும் தலைமயங்கிக்கிடக்கும் செழிப்பைப் புலவர்கள் பல இடங்களில் பாடுகிறார்கள். பெரும்பாணாற்றுப்படை எனும் நூல் 500 அடிகளைக் கொண்டது. இந்நூலின் பாட்டுடைத் தலைவன் தொண்டைமான் இளந்திரையன் ஆவான். இவன் நாட்டில் காணலாகும் ஐந்நிலச் சிறப்புகளையும் மக்களின் வாழ்வியலையும் இந்நூல் எடுத்துரைப்பதால்,இதற்குச் சமுதாயப்பாட்டு என்னும் பெயரும் வந்தது. இந்நூலைப் பாடியப்புலவர் கடியலூர் உருத்திரங்கண்ணனார் என்னும் நல்லிசைப் புலவர் ஆவார். பெரும்பாணாற்றுப்படையை மையப்படுத்தி இவ்வாய்வுக் கட்டுரை அமைகிறது.

**ஊர்ப்பெயர்கள் – பொதுப்பெயர்கள்**

**பேரூர்**

பெரும்பாணாற்றுப்படை, பாணர்கள் செல்லும் வழியில் சிறிய ஊர்களும் அதனைத் தாண்டிச் சென்ற பின்பு வளமை பொருந்திய பெரிய ஊர்கள் இருந்ததையும் எடுத்துரைக்கிறது.

“தொல்பசி அறியாத் துளங்கா விருக்கை
மல்லற் பேரூர் மடியின் மடியா”

(பெரும் : 253 – 254)

என்னும் வரிகளில், மற்ற நாடுகள் பழமையான வறுமையில் வாட வறுமையைச் சிறிது கூட அறியாத குடிகளை உடைய வளம் மிகுந்த பெரிய ஊர்களில் தங்கினீர்கள் எனில், தொழில் செய்வதில் சோம்பல் கொண்டிருந்த உழவர்கள் தங்கள் உழைப்பினால் வந்த வெண்மையான நெல் சோற்றை அவர்கள் வீட்டில் வளர்த்த பெடைக் கோழிக் கறி கொண்டு சமைத்த பொரியலுடன் பெறலாம். அந்த அளவிற்கு வசதிப்படைத்த பேரூர்களும் இருந்தன.

**சீறூர்கள் (சிற்றூர்கள்)**

வழிப்போவார்கள் தம் வயிற்றுப் பசியைத் தீர்த்துக் கொள்ள,

"ஈத்திலை வேய்ந்த எய்ப்புறக் குரம்பை"

(பெரும் – 88)

என்ற வரியில், ஈச்ச இலையினால் வேயப்பட்டிருக்கும் உயரமான முகட்டினையும் எய்ப்பன்றியின் முதுகு போன்ற தோற்றத்தையும் உடைய குடிசையில் தங்குவீர்கள்.

"வடிமணிப் பலகையொடு நிரைஇ முடிநாட்
சாபஞ் சாற்றிய கணைதுஞ்சு வியனகர்"

(பெரும் : 120 – 121)

என்னும் பாடலடிகளிலும், மணிகள் கட்டப்பட்டிருக்கும் பலகைகளுடன் வரிசையாக நிறுத்தி வைத்து அதன் நுனியில் சேர்த்துக் கட்டப்பட்ட நாணுடன் விற்களைச் சார்த்தி வைத்து அம்புகள் கட்டுக் கட்டாகக் கிடக்கும் அகலமான வீடுகள் இருக்கும் என்கிறது.

**சீறூர் - முல்லை நில வாழ்வியல்**

பாணர்களுக்கு அவரைப் பருப்பு கலந்து ஆக்கிய வரகரசிச் சோற்றை வருவோர்க்குப் படைக்கும்,

"பருவ வானத்துப் பாமழை கடுப்பக்
கருவை வேய்ந்த கவின் குடிச் சீறூர்"

(பெரும் : 188 – 191)

என்னும் வரிகளால், மழைக்காலத்தில் வானத்தில் பரவியிருக்கும் மேகங்களைப் போன்று உள்ள வரகு வைக்கோல் போர்த்து வரிசை வரிசையாக உள்ள குடில்களைக் கொண்ட பல சிறிய ஊர்கள் இருக்கும். குடில்கள் அமைந்துள்ள சிறிய ஊர்கள், அகலமான வீடுகள், நல்ல இல்லங்கள், மருத நில வயல்கள் அமைந்துள்ள குடியிருப்புகள் ஆகியன இங்கு இடப்பெயர்களாக அமைந்துள்ளன.

**கோவலர் குடியிருப்பு ஊர்**

ஆயர்கள் தம்மிடம் உள்ள பொருட்களை விற்று, பின்பு நெய் விற்றத்தற்குப் பொருளாகப் பசுமையான கட்டித் தங்கத்தைப் பெறாமல் அதற்காகப் பசுக்களையும் எருமைகளையும் பெறுகின்ற கோவலர்களின் குடியிருப்பைச் சென்றடைவீர்கள் என்று புலவர் எடுத்துரைக்கிறார்.

"எருமை நல்லான் கருநாகு பெறூஉம்
மடிவாய் கோவலர் குடிவயிற் சேப்பின்"

(பெரும் : 165 – 166)

என்னும் பாடலடிகளால் அறியலாம். இவற்றில் கோவலர்கள் தங்கியிருக்கின்ற குடியிருப்பு பகுதிகள் இடப்பெயராக அமைந்துள்ளன.

**பட்டினம் (நெய்தல் நில வாழ்வியல்)**

பெரும்பாணர்கள் செல்லுகின்ற வழியில் நெய்தல் நில மக்களாகிய பட்டினத்தார்களின் உபசரிப்புகளைப் பெறலாம் என்பதை,

"முத்த வார்மணற் பொற்கழங் காடும்

*பட்டின மருங்கி னசையின்''*

*(பெரும் : 335 – 336)*

*என்னும் வரிகளால், சிறிய வளையல்கள் அசையுமாறு முத்துப்போன்ற நிறத்தில் விளங்கும் மணலில் கழங்கினைக் கையில் ஏந்தி விளையாடும் பட்டினம் அடையலாம். இதில் பட்டினம் என்பது நெய்தல் நில அடிப்படையில் இடப்பெயராகிறது.*

***பழவிறல் மூதூர்***

*ஆகாயம் மூடியிருக்கும் பரந்த உலகில் பலரும் வணங்கித் தெழும்படி விழாக்களால் பெருமை பெற்றதும் வெற்றியும் உடைய பழைய ஊராகிய பழவிறல் மூதூர் இருந்தது.*

*''மலர்தலை யுலகத் துள்ளும் பலர்தொழ*

*விழவு மேம்பட்ட பழவிறல் மூதூர்''*

*(பெரும் : 410 – 411)*

*என்னும் வரிகளில், பழவிறல் மூதூர் மருத நில அடிப்படையில் இடப்பெயராக அமைந்துள்ளது.*

***அந்தணர் ஊர் (மறைக்காப்பாளர் உறைப்பதி)***

*கொழுமையான கன்றுகள் கட்டப்பட்டுள்ள சிறிய கால்களை உடைய பந்தலையும், சாணத்தால் மெழுகப்பட்ட, வழிபடும் தெய்வங்கள் வாழும் நல்ல வீடுகளையும் கோழி, நாய் முதலியன இல்லாததால் அமைந்து கிளிகளுக்கு வேதத்தின் ஓசையைக் கற்றுக் கொடுக்கும் வேதங்கள் கூறும் ஒழுக்கத்தைப் பாதுகாக்கும் தொழில் செய்கின்ற அந்தணர்கள் வாழும் ஊரை சென்றடையலாம்.*

*''செழுங்கண் றியாத்த சிறுதாட் பந்தர்ப்*

*பைஞ்சேறு மெழுகிய படிவ நன்னகர்*

*மனையுறை கோழியொடு ஞமலி துன்னாது*

*வளைவாய்க் கிள்ளை மறைவிளி பயிற்றும்*

*மறைகாப் பாளர் உறைப்பதிச் சேப்பின்''*

*(பெரும் : 297 – 301)*

*என்ற பாடல் வரிகளால் அறியலாம். இவற்றில் அந்தணர் ஊர் இடப்பெயராக அமைந்துள்ளது.*

***இடப்பெயர்கள்***

***மலை - மேருமலை***

*''.....வடபாற்*

*செம்பொன் மலையிற் சிறப்பத் தோன்றும்*

*தண்பணை தழீஇய தளரா இருக்கைப்''*

*(பெரும் : 240 – 242)*

என்னும் பாடலடிகளால், வடதிசையில் உள்ள மேரு மலையினை விடச் சிறப்பாகத் தோன்றும் மருத நில வயல்கள் சூழ்ந்திருக்கின்ற குடியிருப்புப் பகுதியை இடப்பெயராகப் பெரும்பாணாற்றுப்படைக் குறிப்பிடுக்கின்றது.

***எயினர் ஊர்***

*பாணர்கள் செல்லும் வழி நெடுகிலும், கானவர்களின் வீடுகளில் தங்கினீர்கள் என்றால் சிறந்த விருந்தினைப் பெறுவீர்கள் என்பதை,*

*"ஊகம் வேய்ந்த உயர்நிலை வரைப்பின்*
*வரைத்தேன் புரையும் கவைக்கடைப் புதையொடு*
*கடுந்துடி தூங்கும் கணைக்காற் பந்தர்த்*
*தொடர்நா யாத்த துன்னருங் கடிநகர்*
*…………………………………………………………………………………………………*
*…………………………………………………………………………………………………*
*வறைகால் யாத்தது வயின்றொறும் பெறுகுவிர்"*

*(பெரும் : 122 – 133)*

*என்னும் பாடலடிகளால் அறியலாம். இவற்றில் அம்புக் கட்டினை, பந்தல்கள், நாய் காவல்கள் அமைந்துள்ள வீடுகள், காவல்காடு, எயினர்களின் அரண்கள் ஆகியன இடப்பெயர்களாக அமைந்துள்ளன.*

***கலங்கரை விளக்கம்***

*"உரவுநீ ரழுவத் தோடுகலங் கரையுந்*
*துறைபிறக் கொழியப் போகிக்……"*

*(பெரும் : 350 – 351)*

*என்னும் பாடலடிகளில், திசைமாறி போன மரக்கலங்களைக் கரையை நோக்கி அழைக்கின்ற நீர்ப்பாயல் துறையில் கலங்கரை விளக்கம் அமைந்திருந்ததை இடப்பெயராக பெரும்பாணாற்றுப்படை குறிப்பிடுகிறது.*

***ஊர்ப்பெயர்கள் - தனிப்பெயர்கள்***

***நீர்ப்பெயற்று***

*மறையவர் பதிக்கு அப்பால் நீர்ப்பெயற்று என்னும் ஊர் இருந்தது.*

*"வைகுறு மீனிற் பைபயத் தோன்றும்*
*நீர்ப்பெயற் றெல்லைப் போகிப்…."*

*(பெரும் : 316 – 319)*

*என்னும் பாடல் வரிகளால், வானில் அதிகாலையில் தோன்றும் வெள்ளி மீன் போலவும், ஒளிவிட்டுத் தோன்றுகின்ற நீர்ப்பாயல் துறை என்னும் ஊரின் எல்லையை இடப்பெயராகப்*

பெரும்பாணாற்றுப்படைச் சுட்டுகிறது.

***நீர்ப்பாயல் துறை (கடற்றுறைப்பட்டினம்)***

*நீர்ப்பாயல் துறை என்னும் ஊரின் எல்லையில் துறைமுகம் அமைந்திருந்தது. அத்துறைமுகத்தை அடுத்துப் பட்டினம் ஒன்று இருந்தது. .*

*“மாடமோங்கிய மணன்மலி மறுகிற்*

*பரதர் மலிந்த பல்வேறு தெருவிற்*

*…………………………………………………………………………………….*

*……………………………………………………………………………………*

*கூழுடை நல்லிற் கொடும்பூண் மகளிர்”*

*(பெரும் : 322 – 327)*

*என்னும் அடிகளில், வடநாட்டில் இருந்து கொண்டு வரக்கூடிய மரக்கலங்கள் சூழ்ந்திருக்கின்ற கடற்கரை, உயர்ந்த மாடங்கள் கொண்ட பல தெருக்கள், பண்டகச்சாலைகள், வீடுகள் ஆகியன நீர்பாயல் துறையில் இடப்பெயராக அமைந்துள்ளன.*

***கச்சி***

*கச்சி என்ற பெயரையே சங்க இலக்கியங்கள் குறிக்கின்றன. பின்னர்தான் காஞ்சி என்ற பெயரையே காண்கின்றோம். கச்சிப்பேடு என்பது கச்சியின் புறநகர் என்று பொருள்படும்.*

*“அடங்காத் தானையோடு உடன்று மேல்வந்து*

*ஒன்னாத் தெவ்வர் உலைவிடத்து ஆர்த்து*

*கச்சியோனே, கைவண் தோன்றல்” - (பெரும்பாண். 418 – 420)*

*என்னும் பாடலில், எண்ணற்ற பெரிய படையுடன் கோபம் கொண்டு தன்மேல் படை எடுத்து வந்த பகைவர்களை வென்று ஆரவாரம் செய்து ஒருவன் காஞ்சிபுரத்தில் (கச்ச) இருக்கின்றான் என்று கச்சி என்ற இடப்பெயரைப் பெரும்பாணாற்றுப்படைக்ள கூறுகின்றது.*

***திருவெஃகா***

*சங்க காலக் கச்சி மாநகரில் ஒன்று திருவெஃகாவும் ஒன்று. பரிசில் பெற்ற பெருபாணன் வறிய பாணனுக்கு திருவெஃகாவிற்கு செல்லும் வழியைப் பின்வருமாறு கூறியுள்ளான்.*

*“.....நீடுகலைக்*

*காந்தளஞ் சிலம்பிற் களிறுபடிந் தாங்குப்*

*பாம்பணைப் பள்ளி யமர்ந்தோ னாங்கண்*

*வெயினுழை பறியாகக் குயினுழை பொதும்பர்க்*

*குறுங்காற் காஞ்சி சுற்றிய நெடுங்கொடிப்*

*பாசிலைக் குருகின் புன்புற வரிப்பூ*

*……………………………………………………………………………………………………….*

……………………………………………………………………………………………………………………

சுடும ணோங்கிய நெடுநகர் வரைப்பின்

(பெரும் : 371 – 405)

என்னும் பாடலடிகளில், பல ஊர்களையும் கடந்த பின்பு அழகிய பக்க மலையில் களிறு படுத்திருப்பது போலப் பாம்பணையாகிய படுக்கையில் திருமால் பள்ளி கொண்டுள்ளான். ஆடவர் அம்மா தராருடன் பகற்பொழுது விளையாடி, துறக்கத்தை ஒக்கும் தப்பாமல் நீர் வரும் முறைமையினையுடைய பூமலி நீர்துறையில் இளவேனிற் காலத்து இன்பத்தை நுகர்வர். வழிப்போக்கரான நீங்கள் அங்குள்ள திருமாலை வாழ்த்தி, யாழைச் சிறிது வாசித்து அவ்விடத்தினின்று செல்லுங்கள். அதனைக் கடந்தவுடன் காவற்காடு தெரியும். அதற்கு அப்பால் கச்சி மாநகரத்துக் கோட்டை மதில் அமைந்திருக்கும். காஞ்சி, பெருந்துறை ஆகியன பெரும்பாணாற்றுப்படை குறிப்பிடுகின்ற இடப்பெயர்களாகும்.

**முடிவுரை**

இடப்பெயர்கள் அல்லது ஊர்ப்பெயர்கள் மிகப் பழமை வாய்ந்தவை. மனித இனம் ஓரிடத்தில் நிலைத்து வாழத் தொடங்கிய காலத்திலேயே இடப்பெயர்களும் தோன்றியிருக்க வேண்டும். இப்பெயர்களின் தோற்றம் ஆய்வு செய்து அல்லது காரணம் கருதிய நிலையில் முதலில் தோற்றுவிக்கப்படவில்லை. மக்கள் தாங்கள் வாழ்ந்த இயற்கை அமைப்பு, சுற்றுப்புறச்சூழல் போன்றவற்றைக் கொண்டு இயல்பாகப் பெயர் அமைத்த நிலையே முதலில் தோற்றம் பெற்றது எனலாம். சங்க இலக்கியமான பத்துப்பாட்டின் மூலம் காலந்தோறும் தொடர்ந்து வரும் இடப்பெயர்கள் அந்தந்தக் கால மக்கள் வாழ்வியலை அறிந்து கொள்ளப் பெரும் பயனாக அமைகிறது. மக்கள் தங்களை அடையாளப்படுத்த ஊர்ப்பெயரைப் பயன்படுத்துகின்றனர். இது பழங்காலம் முதல் வழக்கிலிருந்துள்ளது என்பது புலவர்கள் தம் பெயரின் முன்னால் ஊர்ப்பெயரை வைத்துக் கொண்டதிலிருந்து உணர முடிகிறது.

இலக்கியங்கள், கல்வெட்டுகள், செப்பேடுகள், பிறமொழி இலக்கியங்கள், புதைபொருள் அகழ்வாராய்ச்சி முடிவுகளைப் போன்று இடப்பெயர், ஊர்ப்பெயர் ஆய்வுகளும் வரலாற்றை அறிய உதவும் சான்றாதாரங்களாக விளங்குகின்றன. எங்கு வரலாறு மௌனம் சாதிக்கத் தொடங்குகிறதோ அங்கே இடப்பெயர்களும் ஊர்ப்பெயர்களும் தம் வாய்திறந்து பேசத் தொடங்கும் என அறிஞர்கள் கருத்துரைக்கின்றனர். அவ்வகையில் இன்றும் சில ஊர்கள் தன் பழமையைப் பறைச்சாற்றிக் கொண்டுள்ளதைக் காணமுடிகிறது. மேலும் ஒரு நாட்டின் பழங்கால வரலாற்றையோ, பண்பாட்டையோ அறிந்து கொள்ள பத்துப்பாட்டு நூல் துணை புரிக்கின்றன என்பதை இக்கட்டுரையின் வாயிலாக அறிய முடிகின்றது.

**பயன்பட்ட நூல்கள்**


1. இராசமாணிக்கனார், மா., - பத்துப்பாட்டு ஆராய்ச்சி, சாகித்திய அகாதெமி, இரவீந்திர பவன், புது தில்லி – 110 001

2. முருகேசன், கதி., - பத்துப்பாட்டு மூலமும் உரையும்,
சாரதா பதிப்பகம்,
சென்னை – 14.


**முனைவர் பட்ட ஆய்வேடு**


1. பிரதீபா, பா., - சங்க இலக்கியங்களில் நாடுகளும், ஊர்களும்,
அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி, நாமக்கல், பெரியார் பல்கலைக் கழகம் - 2015